# சேமிப்பை முதலீடாக மாற்றுவதன்

## அவசியம் என்ன?




பங்குச்சந்தை
ஒரு
முதலீட்டு
தெரிவாக

1. **இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு**

- இது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால உருவாக்கப்பட்டது.
- பழைய சட்டமானது நீக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க புதிய இ.பி.ப.ஆ. சட்டமானது 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

  - **தொலைநோக்கு**
    - பிராந்தியத்திலேயே பயனுறுதியான, ஆற்றல்மிக்க மற்றும் முன்னோடியான மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலில் தரக்குறியான முறைமைப் படுத்துபவராக வருவதற்கு
  - **பணிநோக்கு**
    - நியாயமான, செயற்திறனான, முறையான மற்றும் வெளிப்படையான ஓர் மூலதனச் சந்தையினை ஊக்குவிப்பதற்கு, விருத்தி செய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு

2. **இ.பி.ப.ஆ. இன் பிரதான செயற்பாடுகள்**


- உரிமமளித்தல்
  - சந்தை நிறுவனங்கள்
  - சந்தை இடையீட்டாளர்கள்
  - பதிவீடளித்தல்
  - தீர்வக அங்கத்தவர்கள்
  - வர்த்தக பங்குபற்றுநர்கள்
  - வைப்பக பங்குபற்றுநர்கள்
- உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களை மேற்பார்வை செய்து முறைமைப்படுத்துதல்
  - பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளை வழங்குதல்
  - பிணையங்களது வழங்கலை முறைமைப்படுத்துதல்
  - ஒரு பரிவர்த்தனையில் பிணையங்களது பட்டியலிடல் மற்றும் வர்த்தகத்தினை முறைமைப்படுத்துதல்
  - பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியின் பொறுப்பேற்பு அல்லது இணைப்பினை முறைமைப்படுத்துதல்
  - இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் விதிகள் அல்லது ஒழுங்குவிதிகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்

# சேமிப்பிற்கு அப்பாலான நிதி நலனுக்கான திறவுகோல்

(Key to financial well being Beyond Savings)



நிதித் திட்டங்களைக் கட்டமைக்கும் போது பலர் சேமிப்பை மாத்திரம் சார்ந்திருக்கின்றனர். சேமிப்பின் முக்கியத்துவத்தினை குறைத்து மதிப்பிட முடியாதெனினும், உங்கள் நிதி இலக்குகளை அடைய நீங்கள் மிகவும் இயக்காற்றல் மிக்க அணுகுமுறையை பின்பற்ற வேண்டும். செல்வத்தைக் கட்டியெழுப்பும் உங்கள் நோக்கத்திற்கு முதலீடு ஒரு சிறந்த வெகுமதியாக கருதப்படலாம். முதலீடுகள் பல வகைப்படும் இந்த



புத்தக கையேடு பிரதானமாக பங்கு சந்தை முதலீடு தொடர்பாக கவனம் செலுத்தும்.

## பங்கு சந்தை (The Stock Market)

### நிதி நலனுக்கான பாதை
### Path to Financial Well-Being

பங்குச் சந்தை எனப்படுவது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகள் கொள்வனவு விற்பனை செய்யப்படும் தளமாகும். எளிமையான சொற்களில் கூறுவதானால் நிறுவனங்கள் மூலதனத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஈடாக முதலீட்டாளர்களுக்கு நிறுவனத்தின் உரிமையில் ஒரு பங்கினை இது பெற்றுக் கொடுக்கின்றது.

கொழும்பு பங்கு சந்தை இலங்கையில் உரிமம் பெற்ற ஒரே பங்கு சந்தையாக செயல்படுகின்றது. முதலீட்டாளர்கள் “முதலாம் தரச் சந்தை” அல்லது “இரண்டாம் தரச் சந்தை” மூலம் பங்கு சந்தையில் நுழையலாம். முதலாம் தரச் சந்தையில் முதலீட்டாளர்கள் பங்குகளை வழங்கும் நிறுவனத்திடமிருந்து நேரடியாக பங்குகளை கொள்வனவு செய்யும் அதே சமயம் இரண்டாம் தரச் சந்தைகள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட பங்குகளை கொள்வனவு விற்பனை செய்யும் தளத்தினை குறித்து நிற்கின்றது. இரண்டாம் தரசந்தையில் பரிவரித்தனைகள் முதலீட்டாளர்களிடையே நிகழ்கின்றன.

# பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள்

(Benefits of Investing in Stocks)



## முதலீட்டுலாபம்

(Investment Gains)

மூலதன இலாபம் என்பது ஒரு பங்கினை கொள்வனவு செய்த விலையை காட்டிலும் அப்பங்கின் பெறுமதி அதிகரிப்பதனால் ஈட்டப்படும் உயர்பெறுமானத்தினை குறிக்கும். இவ்விலாபமானது அப்பங்கினை விற்கும் வரையில் உணரப்படாது.

## உரிமைகள் மற்றும் இலவச பங்குகள்

(Rights and Free Shares)

பெரும்பாலான நிறுவனங்கள் தங்கள் பங்குதாரர்களுக்கு இலவசமாக அல்லது தள்ளுபடி விலையில் பங்குகளை வழங்குகின்றன.

## பங்கிலாப வருமானம்

(Dividend Income)

பங்கிலாபமானது பங்குதாரர்களுக்கான வெகுமதியாக கருதப்படலாம். இவை ஒரு நிறுவனமானது இலாபம் ஈட்டி அதன் அனைத்து பொறுப்புகளையும் நிறைவேற்றிய பின்பு வங்கியில் கையிருப்பு இருக்குமிடத்து வழங்கப்படுகின்றது.

## திரவத்தன்மை

(Liquidity)

தினமும் முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கி விற்கின்றார்கள். உங்கள் பங்குகளை விற்க விரும்புமிடத்து கொள்வனவாளர்களை கண்டுபிடிப்பது விரைவானது மற்றும் இலகுவானது. இக்காரணங்களால் பங்குகள் ஒப்பீட்டளவில் திரவத்தன்மைகூடிய சொத்துக்களாக கருதப்படுகின்றன.

## உரித்துடைமை

(Ownership)

ஒரு நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்வதென்பது நீங்கள் அந்நிறுவனத்தின் உரித்துடைமையில் ஒரு பங்கினை (நீங்கள் பங்குதாரர் ஆவீர்கள்) எடுத்துக் கொள்வதாகும். உங்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படலாம் மற்றும் அதன் மூலம் நிறுவனத்தின் முடிவெடுக்கும் செயல் முறையில் ஒரு பகுதியாக நீங்கள் இருக்கலாம். அதாவது பங்கு சந்தையில் முதலீடு செய்வதனால் ஒரு வணிகத்தின் ஒரு பகுதியை சொந்தமாக வைத்திருப்பதன் நன்மையையும் உங்களுக்கு தருகிறது.

## உங்களுக்கு பங்கு சந்தையில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் இருக்கின்றதா?

(Are you interested in investing in the stock market?)

ஆரம்ப பொது வழங்கல் மூலமாகவோ அல்லது இரண்டாம் தரச்சந்தை மூலமாகவோ பங்குகளை வாங்க முதலீட்டாளர் ஒருவர் வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத்திட்டத்தில் (CDS) கணக்கொன்றினை தொடங்க வேண்டும். அப்பிள் ஸ்டோர் (Apple Store) அல்லது கூகுள் ப்ளேயில் காணப்படும் கொழும்பு பங்கு சந்தை (CSE) மொபைல் அப்பிளிகேசன் மூலம், உங்கள் தரகரின் அலுவலகத்திற்குச் செல்லாமல் 24 மணி நேரத்திற்குள் (CDS) கணக்கினை திறக்கலாம். பங்குத்தரகர் நிறுவனங்களின் பட்டியலை www.cse.lk அல்லது www.sec.gov.lk எனும் தளங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

## கணக்கறிக்கை

(Statement of Accounts)

ஒரு பங்குத் தரகர் நிறுவனத்திற்கு பணம் செலுத்த வேண்டிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அல்லது நிறுவனம் பணம் செலுத்த வேண்டிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் (அதாவது மூன்று வர்த்தக நாட்களுக்கு (T+3) மேல் நிலுவையிலுள்ள) மாதாந்த அடிப்படையில் கணக்கு அறிக்கையை எலக்ட்ரானிக் வழி மூலம் அடுத்த மாதத்தின் 7வது நாளிற்கு முன் அனுப்ப வேண்டும். இந்த அறிக்கை வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கொடுப்பனவுகள் / பற்றுச்சீட்டுக்கள் மற்றும் நிலுவையில் உள்ள கடன் மீது விதிக்கப்படும் வட்டியை கண்காணிக்க உதவுகின்றது.



## CDS கணக்கு கூற்று

(CDS Statement)

வாடிக்கையாளர் வைத்திருக்கும் அனைத்து பட்டியலிடப்பட்ட பங்குகள் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கிய CDS கணக்கறிக்கையானது கணக்கு வைத்திருப்பவர் அச்சிடப்பட்ட பிரதியொன்றினை கோராத வகையில் CDS ஆல் நேரடியாக மின்னனு வடிவத்தில் மின்னஞ்சல் முகவரிக்கு கணக்கு வைத்திருப்பவருக்கு அனுப்ப வேண்டும். கொள்வனவு விற்பனை குறிப்புகளை அல்லது கொடுக்கப்பட்ட விபரங்களை சரிபார்க்க CDS கணக்கு கூற்று ஒரு சிறந்த வழியாகும். உங்கள் தொடர்பு தகவலில் மாற்றம் ஏற்படுமிடத்து அம்மாற்றங்களை உடனடியாக தெரிவிக்கவும்.

## இடர்களை நிர்வகித்தல்

(Managing Risk)

பங்கு முதலீடு என்பது ஏனைய முதலீடுகளை போன்றது. இது ஒரு குறிப்பிட்டளவிலான இடரினை கொண்டிருக்குகின்றது. ஒரு பங்கின் எதிர்கால விலையை 100% சரியாகவும் துள்ளியமாகவும் கணிக்க முடியாதென்பதால் இந்த இடர் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

## நீங்கள் ஏன் இடர்களை எதிர் கொள்ள வேண்டும்? (Why Should You Undertake Risk?)

முதலீடு செய்வதில் காணப்படும் போராட்டம் தான் இடரிற்கும் முதலீட்டு வருவாய்க்கும் இடையிலான சமநிலையை பேணுவதாகும். எளிமையாகச் சொல்வதானால் அதிக இடர்

அதிக வருவாயினை வழங்கக்கூடிய நிகழ்தகவுடன் தொடர்புடையது. மேலும் குறைந்த இடர் என்பது குறைவான வருவாயினை வழங்கக்கூடிய நிகழ்தகவுடன் தொடர்புடையது.

பகுத்தறிவு மற்றும் புத்திசாலித்தனமான முதலீட்டாளர் ஒருவர் செல்வத்தை அதிகப்படுத்துவதற்கு இடரினை பொறுப்பேற்பதில் தாராளமனப்பாண்மையை கடைப்பிடிப்பார். இருப்பினும் இதற்காக அளவுக்கு மீறிய இடரினை பொறுப்பேற்க அவசியமில்லை ஆனால் வருவாயினை அதிகரிக்க கணக்கிடப்பட்ட இடர்களை முகங்கொள்ள ஊக்குவிக்கின்றது.

## இடரினை குறைத்து இலாபத்தை அதிகரித்தல்
(Minimizing Risk & Maximizing Returns)

### முதலீட்டுத் திட்டம் தயாரித்தல்
(Make an Investment Plan)

இத்திட்டமானது உங்களது முதலீட்டுக் குறிக்கோள், கால வரையறை, இடருக்கான ஆர்வம், திரவத்தன்மை மற்றும் தனிப்பட்ட நிதி நிலமைகள் போன்றவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

### நீண்ட காலத்திற்கு யோசியுங்கள்
(Think Long Term)

குறுகிய காலத்தில் சந்தைகள் மாற்றமடையக்கூடியவையாகும். எனவே பங்குச் சந்தையில் வெற்றியடைவதற்கு நீண்ட கால நோக்குடன் முதலிடுவது பாதுகாப்பான வழிகளில் ஒன்றாகும். உங்களது முதலீடுகளை ஒழுங்காக அவதானியுங்கள் உங்களின் முதலீடுகள் சம்பந்தமாக கண்காணிப்புடன் இருக்கவும். தவறாமல் உங்களது முதலீடுகளை மீள்ஒதுக்கீடு செய்வது குறித்தும் கவனமெடுக்கவும்.

### தகவலறிந்த முதலீட்டாளராக இருங்கள்
(Be an Informed Investor)

பகுப்பாய்வு, இடர் ஆர்வம், முதலீட்டு குறிக்கோள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உங்களது சொந்த முதலீடு சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பது முக்கியமானதாகும்.

### அச்ச உணர்வை தவிர்த்துக் கொள்ளவும்
(Avoid Panic)

அச்ச உணர்வு என்பது பகுத்தறிவற்ற தீர்மானங்களை மேற்கொள்வதற்கு துாண்டும் உணர்ச்சிவேகமாகும். வைத்திருக்க வேண்டிய பங்குகளை விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்யவேண்டிய பங்குகளை கொள்வனவு செய்தல் என்பன பகுத்தறிவற்ற தீர்மானங்களாகும்.

### பன்முகப்படுத்தல்
(Diversify)

ஒரே கம்பனியில் உங்களது முழுப்பணத்தையும் முதலீடு செய்ய வேண்டாம். பணத்தை பல்வேறு வகையான சொத்துக்கள், கம்பனிகள் மற்றும் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கீடு செய்து முதலீடு செய்யவும்.

### இடரினை பொறுப்பேற்கும் தன்மையை மதிப்பீடு செய்தல்
(Assess Your Risk Appetite)

உங்களின் இடரினை பொறுப்பேற்கும் ஆற்றல், உங்களின் நிதி நிலைமை, ஆரோக்கியம், வயது என்பவற்றில் தங்கியுள்ளது எனவே முதலீடு செய்யுமுன் உங்களால் எதிர்கொள்ளக்கூடிய இடர் சம்பந்தமாக தீர்மானமெடுத்துக் கொள்ளுங்கள்.

## முதலீட்டு ஆலோசகர்கள்
(Investment Advisors)

முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிடமிருந்து ஒருவர் பதிவு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் என்ற அந்தஸ்தைப் பெற வேண்டும்.

## முதலீட்டு ஆலோசகர்களை எவ்வாறு கண்டுபிடிப்பது
(How to find an investment Advisor)

முதலீட்டு சேவைகளை வழங்கக்கூடிய அதிகமான முதலீட்டு ஆலோசகர்கள் இருக்கின்றார்கள். உங்களது உச்ச நலனுக்காக சிறந்த ஆலோசனைகளை வழங்கி உங்கள் நிதிக் குறிக்கோள்களை அடைவதற்கு உதவக் கூடிய அவ்வாறான ஒருவரை மதிப்பீடு செய்து தெரிவு செய்வது உங்களது கடமையாகும்.

ஒரு திறமைமிக்க முதலீட்டு ஆலோசகரைப் பெறுவதற்காக உங்களுக்குத் தேவையான சேவைகள் பற்றி தீர்மானிப்பதுடன் தெரிவுசெய்ய நீங்கள் எதிர்பார்க்கும் முதலீட்டு ஆலோசகர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்துவதுடன் உங்களது தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஒருவரின் அடிப்படையில் தீர்மானமெடுக்க வேண்டும்.

நண்பர்கள், குடும்ப உறுப்பினர்களின் தனிப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையிலும் முதலீட்டு ஆலோசகர்களைத் தெரிவு செய்யலாம். எனினும் ஒருவருக்கு நன்மை பயக்கும் ஒன்று மற்றவர்களுக்கு நன்மை கொடுக்காததாக இருக்க முடியும். அந்நபரைப் பற்றி சரியான மதிப்பீடுகளை நடத்துவது உங்களின் பொறுப்பாகும்.







ஆலோசனைகளை பெறுவதற்காக முயற்சி செய்யம் போது, அவர்களது தொழில் அனுபவங்கள் பயிற்சி தகைமை ஆகியவற்றை பரிசீலனை செய்வதை கருத்திற் கொள்ள வேண்டும். பதிவு செய்யப்பட்ட முதலீட்டு அனுபவங்களின் தகைமைகள் பற்றி SEC இணையத்தளம் மூலமும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

## முதலீட்டு ஆலோசகர்களுடன் பணிபுரிவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள்

(Benefits of Working with an Investment Advisor)

- நிதி திட்டமிடலுக்கு உதவி பெறல்.
- முதலீட்டுத்தேக்க முகாமைத்துவம்
- முதலீட்டு ஆலோசனை வழங்கல்.

ஆலோசகர் ஒருவரைத் தேடுவதற்கு ஆரம்பிக்கும் முன்னர், தொழில்சார் ஆலோசனையாக உங்களுக்கு என்ன தேவை என நீங்கள் உங்களைக் கேளுங்கள். முதலீட்டு ஆலோசகரின் அனுபவம், ஆதாரச்சான்று (Credential) ஆகிய சிறப்புத்தன்மைகள் உங்களது நிலமைகள், தேவைகளுக்கும் பொருத்தமாக அமைவது முக்கியமாகும்.

## ஒரு பொருத்தமான முதலீட்டு ஆலோசகரை தெரிவு செய்து உங்களது நிதி வளத்தை மேம்படுத்துங்கள்.

(Select a suitable investment advisor and enhance your financial well-being)



ஒரு பங்குச் சந்தையில் சரியான முதலீட்டு ஆலோசகரைத் தெரிவு செய்வது ஒரு சவாலான காரியமாகும். உங்களது முதலீட்டு ஆலோசகர் எதிர்காலத்தில் உங்களது நிதி சம்பந்தமாக முக்கிய பங்கு வகிக்கிறார்.

SEC இல் பதிவு செய்யப்பட்ட அளவீட்டு மட்ட (Bench Mark Level) தொழில் தகைமைகளைப் பெற்றுள்ள முதலீட்டு ஆலேரசகர்களுடன் தொழில்புரிவது குறித்து முதலீட்டாளர்கள் கருத்திலெடுத்தல் வேண்டும்.

## பங்குத் தரகர் நிறுவனங்களுக்கு எதிராக முதலீட்டாளர்களின் முறைப்பாடு

(Client complaints against stockbroker firms)

பிணையங்களில் முதலீடு தொடர்பாக பங்குத் தரகர் நிறவனங்களுக்கெதிராக முறைப்பாடு செய்ய விரும்பினால்






பங்குத்தரகு நிறுவனத்தின் இணக்கப்பாட்டு அதிகாரிக்கு எழுத்து மூலமாக சர்ச்சைக்குரிய வியாபார செயற்பாடுகளை கண்டுபிடித்ததன் பின்னர் விரைவாக அனுப்ப வேண்டும்.

உங்களது முறைப்பாடு தொடர்பாக பங்குத்தரகு நிறுவனத்தின் தீர்மானத்தில் நீங்கள் திருப்தியடையாவிட்டால் அல்லது பங்குத்தரகு நிறுவனம் தனது தீர்மானத்தை தாமதப்படுத்தினால் அம்முறைப்பாட்டை எழுத்து மூலமாக SECன் செயலகத்திற்கு தெரியப்படுத்தவும் அல்லது அஞ்சல், தொலைநகல், மின்னஞ்சல் மூலம் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு முறையீடு செய்யவும்.

SECன் தீர்மானத்தில் திருப்தியடையாத ஒருவர் SECன் சுயாதீன குழுவிற்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

(Securities and Exchange Commission of Sri Lanka)

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு 1987ம் ஆண்டின் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 36 இலக்க சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. (1991ம் ஆண்டின் சட்ட இல.26, 2003ம் ஆண்டின் சட்ட இல.18 மூலம் திருத்தப்பட்டது) குறித்த சட்டம் தற்போது இரத்துச் செய்யப்பட்டு 2021ம் ஆண்டின் 19 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் சட்டமாக்கப்பட்டது.

## சட்டத்தின் குறிக்கோளும் நோக்கமும் (Objectives of the SEC Act)

- திறமையான, ஒழுங்கான வெளிப்படைத் தன்மையுள்ள பிணையங்கள் சந்தையை உருவாக்கி, பராமரித்து ஒழுங்குபடுத்தல்.
- உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தலும் பிணையங்கள் சந்தைகள் தொடர்பாக சேவைகள் வழங்குதில் உயர் தொழில்தரத்தினை பேணுவதை உறுதிப்படுத்துதல்.
- உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தலும் பிணைமுறிகள் சந்தைகள் தொடர்பாக சேவைகள் வழங்குதில் உயர் தொழில்தரத்தினை பேணுவதை உறுதிப்படுத்துதல்.



## கொ.ப.ப. (CSE) இன் மொபைல் அப் சேவைகள்

முதலீட்டாளர்கள் மத்திய வைப்புத் திட்ட (ம.வை.தி /CDS) கணக்கை ஆரம்பித்தல் உட்பட கொ.ப.ப இன் பல்வேறு டிஜிட்டல் சேவைகளை மொபைல் செயலி ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

அன்ரொயிட் மொபைல் பாவனையாளர்கள் Google Play ஊடாகவும் ஐ-போன் பாவனையாளர்கள் App Store ஊடாகவும் கொ.ப.ப இன் மொபைல் செயலி இனை தரவிறக்கம் செய்து, ஒரு உள்நுழைவு கணக்கினை திறப்பதன் ஊடாக பின்வரும் டிஜிட்டல் சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

1. ம.வை.தி கணக்கினை ஆரம்பித்தல்
2. CDS E - Connect சேவைகள்
3. MyCSE சேவை
4. ஆரம்ப பொது வழங்களுக்கான விண்ணப்பம்
5. Siri சேவைகள்

## மத்திய வைப்புத் திட்ட (ம.வை.தி /CDS) கணக்கை ஆரம்பித்தல்

முதலீட்டாளர் ஒருவர் கொ.ப.ப. இன் மொபைல் செயலி ஊடாக பின்வரும் ஆறு படிமுறைகளில் தனக்கான ஒரு ம.வை.தி கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

**படிமுறை** 1 - தனிப்பட்ட தகவல்களை நிரப்புதல் மற்றும் பங்குத்தரகர் நிறுவனமொன்றை தெரிவு செய்தல்.

**படிமுறை** 2 - வதிவிட தகவல்களை நிரப்புதல்

**படிமுறை** 3 - வங்கிக் கணக்கு தகவல்களை நிரப்புதல்

**படிமுறை** 4 - தொழில்நிலை தகவல்களை நிரப்புதல்

**படிமுறை** 5 - அரசியல் நடவடிக்கைகளோடு தொடர்புபட்டிருப்பின், அது தொடர்பான தகவல்களை வழங்குதல்.

**படிமுறை** 6 - சுய உருவப்படம், தேசிய அடையாள அட்டையின் இரு புறம் மற்றும் வங்கிக் கணக்கு புத்தகத்தின் தகவல் பக்கம் அல்லது தனிப்பட்ட தகவல்கள் உள்ளடங்கிய வங்கிக் கூற்று போன்றவற்றின் படங்களை பதிவேற்றம் செய்தல்.

இறுதியாக, நியதிகள் மற்றும் நிபந்தனைகள், பங்குத்தரகர் ஒப்பந்தம் மற்றும் வெளிப்படுத்துகை ஆவணங்கள் என்பவற்றை வாசித்து விளங்கிக் கொண்டு விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்களுடைய விண்ணப்பம் பங்குத்தரகர் நிறுவனத்தினால் பரிசீலிக்கப்பட்டு, தகவல்கள் சரியாக அமையும் பட்சத்தில் உங்களுக்கான ம.வை.தி கணக்கு ஆரம்பிக்கப்பட்டு கணக்கிலக்கம் மின்னஞ்சல் ஊடாக உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.



SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

Address : Level 28 and 29, East Tower,
World Trade Centre, Echelon Square,
Colombo 01, Sri Lanka.
Telephone : +94 11 2143843
Fax : +94 11 2439149
Email : mail@sec.gov.lk
Web : www.sec.gov.lk